# ශ්‍රී ලංකා ප්‍රජාතාන්ත්‍රික සමාජවාදී ජනරජයේ ගැසට් පත්‍රය

අති විශෙෂ

# இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானப் பத்திரிகை

அதி விசேஷமானது

අංක 1787/22 - 2012 දෙසැම්බර් මස 05 වැනි බදාදා - 2012.12.05

*1787/22 ஆம் இலக்கம் - 2012 ஆம் ஆண்டு திசெம்பர் மாதம் 05 ஆந் திகதி புதன்கிழமை*

*(அரசாங்கத்தின் அதிகாரத்துடன் பிரசுரிக்கப்பட்டது)*


## பகுதி I : தொகுதி (I)- பொது

### *அரசாங்க அறிவித்தல்கள்*

*பணிப்புரை இல. 42.*

**2003 ஆம் ஆண்டின் 9 ஆம் இலக்க, பாவனையாளர் அலுவல்கள் அதிகாரசபைச் சட்டம்**

*10 (1) (அ) ஆம் பிரிவின் கீழான பணிப்புரை*

*2003 ஆம் ஆண்டின் 9 ஆம் இலக்க, பாவனையாளர் அலுவல்கள் அதிகார சபைச் சட்டத்தின் 10 (1) (அ) ஆம் பிரிவின் கீழ் உரித்தளிக்கப்பட்ட அதிகாரங்களின் கீழ் செயற்படும், பாவனையாளர் அலுவல்கள் அதிகார சபையானது, மருந்துகளினதும் மற்றும் விற்றமின்களினதும் தயாரிப்பாளர்களுக்கும் இறக்குமதியாளர்களுக்கும் பின்வருவனவற்றை அவர்களால் விற்கப்படும் எல்லா மருந்துகளினதும் மற்றும் விற்றமின்களினதும் பொதியின் மீது அல்லது கொள்கலன் மீது அல்லது அலகுகளின் மீது தெளிவாக அழிக்க முடியாத மையினால் குறிக்கப்படுதல் வேண்டுமென பணிப்புரை விடுக்கின்றது.*

*(அ) ஆகக்கூடிய சில்லறை விலை ;*
*(ஆ) தொகுதியிலக்கம் ;*
*(இ) உற்பத்தித் திகதி ;*
*(ஈ) காலாவதித் திகதி ;*
*(உ) வலு ; மற்றும்*
*(ஊ) உற்பத்தியாளரினது மற்றும் அல்லது இறக்குமதியாளரினது பெயர், முகவரி விபரங்களை அல்லது இலங்கையில் பதிவு செய்யப்பட்ட வர்த்தகக் குறி.*

*பாவனையாளர் அலுவல்கள் அதிகாரசபையானது, மருந்துகளும் மற்றும் விற்றமின்களும் சம்பந்தமான பணிப்புரைகளான இல. 2 மற்றும் இல. 4 என்பன முறையே பிரசுரிக்கப்பட்ட 2003 ஆம் ஆண்டு ஆவணி மாதம் 25 ஆம் திகதிய 1303/1 ஆம் இலக்க மற்றும் 2005 ஆம் ஆண்டு ஆவணி மாதம் 26 ஆந் திகதிய 1407/23 ஆம் இலக்க அதிவிசேட வர்த்தமானிகளின் பணிப்புரைகளை இத்தால் நீக்குகின்றது.*

*இப்பணிப்புரை 2013, சனவரி 01 ஆந் திகதியிலிருந்து அமுலுக்கு வருகின்றது.*

*பாவனையாளர் அலுவல்கள் அதிகாரசபையின் கட்டளைப்படி,*

*ரூமி மர்சூக்,*
*தவிசாளர்.*

*கொழும்பு,*
*2012, திசெம்பர் 04.*

*12 - 511/1*